தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 18, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037
2006 ஆகஸ்ட் 3, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

திரு. டி. ஜெயக்குமார்: **

1. அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, பேரவைத் தலைவராக இருக்கக்கூடிய என்மீது... (குறுக்கீடுகள்) அறிவிப்பு வாசித்துக் கொண்டிருக்கிறேன், உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) அறிவிப்பு வாசித்துக்கொண்டிருக்கிறேன், உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) Record ஆகாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லாமல் பேசுவது அவையின் மரபை மீறுவதாகும். (கூச்சல்–குழப்பம்) அனுமதியில்லாமல் பேசுவது அவையின் மரபை மீறுவதாகும்; தெரிகிறதா? உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜெயக்குமார், திரு. சேகர்பாபு, (கூச்சல்–குழப்பம்) இரண்டு பேரும் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) பேரவையினுடைய தலைவராக இருக்கக்கூடிய என்மீது, அவை உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். நேற்று அது அலுவலகத்தில் பெறப்பட்டது. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிற அந்த வேண்டுகோளில் ஏகப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. இருந்தாலும் அதை அனுமதித்து இங்கே எடுத்துக்கொண்டு, அதன்மீது வழிமொழியக்கூடிய உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகின்றேன். அப்படி வழிமொழியக்கூடிய உறுப்பினர்கள் இங்கு இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எழுந்து நிற்க வேண்டுகிறேன்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

திரு. டி. ஜெயக்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தைப் படித்துவிடுகிறேன். தீர்மானம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் முதலில். (கூச்சல்–குழப்பம்) அரசினர் தீர்மானம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

2. அரசினர் தீர்மானம்

விதி 68–ஐத் தளர்த்தல்

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடனடியாக இந்த அவை எடுத்துக்கொள்ள அனுமதிப்பதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி)

“சட்டமன்றப் பேரவை விதி 68–ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்திற்கு 14 நாட்கள் முன்னறிவிப்பு அளிக்க வேண்டும் என்ற விதியினைத் தளர்த்தி முனைவர் மு. தம்பிதுரை அவர்கள் 2–8–2006 அன்று அளித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை—பேரவைத் தலைவர்மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை இன்றே பேரவையில் எடுத்துக்கொள்ள வேண்டும்”